**சார்பு நீதிமன்றம், காங்கயம்.**

OS.No. 05/2020
PW – 3 – குமார்
தேதி : 15.04.2026

**சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. சாட்சி அழைப்பாணை வரவில்லை, வாதி அழைத்ததால் வந்துள்ளேன். வாதி எனக்கு உறவினரா என்றால் பங்காளி வீட்டு அண்ணன் மகள். 2ம் வாதிக்கும் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2010. குடும்ப ஏற்பாட்டு திருமணம் என்றால் சரிதான். திருமணத்தின் போது 20 பவுன் நகை, பணம் ரூ.2 இலட்சம் கொடுத்ததாக சொல்வதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன். அதுபோல் 20 பவுன் நகை, பணம் ரூ.2 இலட்சம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு 7 வருட காலம் இருவரும் நல்ல முறையில் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. 7 வருடம் நன்றாக வாழ்ந்தனர் என முதல் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. குடிகார நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வந்து 2ம் வாதியை அடித்து கொடுமைப்படுத்தியதாக சொல்வது எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். தன்னை அடித்து கொடுமைப்படுத்தியதாக 2ம் வாதி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, ஒரு முறை கொடுத்துள்ளார். அது போல் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

2. 2016ல் பிரதிவாதி 2ம் வாதியை அடித்து வீட்டைவிட்டு துரத்திவிட்டதாக சொல்லும் சம்பவத்திற்கு பிறகு சேர்ந்து வாழ்வதற்கு நான் சமரசம் எதுவும் பேசவில்லை என்றால் சரியல்ல. ஒருமுறை பேசி அழைத்து சென்றுவிட்டுள்ளேன். எந்த முகவரியில் கொண்டுபோய் விட்டேன் என்றால் பிரதிவாதியின் வீட்டில். நான் சொல்வது போன்ற ஒரு நிகழ்வு நடக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதியை பிரதிவாதி அடித்து துரத்தவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்பதை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். விபத்தில் கால் அடிபட்டு சிகிச்சை பெற்றதாக எதிர்வாதத்தில் சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதி சிகிச்சையில் இருந்த சமயம் பார்த்துக்கொள்ளமாட்டேன் என்று சண்டைசெய்து வெளியேறிவிட்டார் என்றால் சரியல்ல. தற்போதும் வாதிகளை

அழைத்து சென்று வாழ்வதற்கு பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் பிரதிவாதி குடிபோதையில் இருந்து தற்போதும் மீளவில்லை என சாட்சி கூறுகிறார்.

3. நான் சொல்வது போல் பிரதிவாதிக்கு குடிப்பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே வயது வித்தியாசம் அதிகமாக இருப்பதால் சொத்தை அபகரித்துக்கொண்டு 2ம் வாதிக்கு வேறு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. 2ம் வாதி நெருங்கிய உறவினர் என்பதால் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்/கைரேகை செய்தார்.

S SANTHANA KRISNASAMY

Digitally signed by S SANTHANA KRISNASAMY
Date: 2026.04.15 17:59:49 +0530

சார்பு நீதிபதி,
காங்கயம்.